**இம்புள்பே பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இம்புள்பே பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று,காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு சய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் இம்புள்பே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(i)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இவ் அறிக்கையின் 1.6.1 (ஆ) பந்தியின் குறிப்பிட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டினுள் சபைக்கு சொந்தமான கட்டிடங்கள் மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,292,848 ஆன செலவினம் மூலதனமாக்கப்படாத காரணத்தால நிலையான சொத்துக்கள் மூலதன ஈடுபடுத்தளிற்கு வருமானத்ததினால் பங்களிக்கும் கணக்கு மீதி அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | குறித்த தொகையை ஐர்னல் குறிப்பினூடாக சீராக்கி மூலதனமாக்க நடவடிக்கை எடுப்பதாக. | கட்டிடங்கள் மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டு முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 460,275 தொகையை செலவினமாக கணக்கீடு செய்த வதறை மீளாய்வாண்டில் சரிசெய்திருக்காததுடன், மீளாய்வாண்டினுள் முத்திரைக் கட்டண குறை ஒதுக்கீடு ரூபா 5,875,970 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஐர்னல் குறிப்பு மூலம் சரிசெய்வதாக. | குறித்த கணக்குகளை சரி செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 1,861,109 ஆன போதும் அதனை ரூபா 1,051,566 ஆக கணக்கீடு செய்ததில் | | |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் மிகை மற்றும் நடைமுறை சொத்துக்கள் ரூபா 809,543 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | கடந்த ஆண்டிற்குரிய வேலை கடன்படுனர் ரூபா 5,558,803 தொகை கடன்படுனர் மிகை ஒதுக்கீடாக பதிவழித்திருத்தல் மற்றும் மீண்டும் மீளாய்வாண்டின் கடன்படுனர்களாக கணக்கீடு செய்திருந்த காரணத்தால் ஆண்டின் மூலதன வருமானம் அத் பெறுமதியால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தன. | ஜர்னல் குறிப்பினூடாக சரி செய்வதாக. | குறித்த கணக்யை சரி செய்ய வேண்டும். |
| (உ) | கடந்த ஆண்டுகளிற்குரிய வேலை கடன்கொடுனர் ரூபா 4,130,949 தொகையை கடன்கொடுனர் மிகை ஒதுக்கீடாக பதிவழித்திருந்தமை மற்றும் மீண்டும் மீளாய்வாண்டில் கடன்கொடுனராக கணக்கீடு செய்ததில் மீளாய்வாண்டின் மூலதன செலவு அப்பெறுமதியால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தன. | | |
| (ஊ) | ஜர்னல் குறிப்பு இலக்கம் 148 ஊடாக ரூபா 628,094 தொகை மூலதன செலவுக் கணக்கை வரவு வைத்து கடன்கொடுனர் கணக்கிற்கு செலவு வைத்திருந்த போதும் அதற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் அல்லது உடன்படிக்கையிடல் எதுவும் மீளாய்வாண்டினுள் இடம்பெற்றிருக்காததால் ஆண்டின் மூலதன செவினம் மற்றும் கடன்கொடுனர் சமமான பெறுமதியால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தன. | இத்தவறை 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுகளில் காட்டப்படும் 03 கணக்கு விடயங்களிற்குரியதாக மீதிகள் மற்றும் துணை பதிவேடுகளிகு இடையில் கூட்டுத் தொகை ரூபா 1,110,667 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் அதனுடன் தொடர்புடைய துணை பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்ய வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371 (5) | 2002 ஆண்டு முதல் 2009 ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய இனங்காணப்படாத முற்பணம் ரூபா 3,193,731 இனை தீர்த்துக் கொள்ள முடியாததால் பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்திற்கு சமர்பித்திருந்ததுடன் 2010 ஆண்டு முதல 2020 ஆண்டு வரை விநியோகித்திருந்த கூடடுத் தொகை ரூபா 284,110 ஆன 03 மீண்டுவரும் முற்பணம் மற்றும் கூட்டுத் தொகை ரூபா 638,586 ஆன 06 மூலதன முற்பணத்தையும் மீளாய்வாண்டு இறுதி வரை தீர்த்திருக்கவில்லை. | இம் முற்பணத்தை தீர்ப்பதற்குரிய வவுசர் பத்திர தகவல்களை கண்டறிய முடியாதுள்ளது. காணப்படும் தகவல்களுடன் இவற்றை பதிவேடுகளிலிருந்து பதிவழிக்க தேவையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள உள்ளூராட்சி ஆணையாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாறான பிரச்சினைகள் இதன் பிரகு இடம்பெறாதிருக்க தேவையான நடவடிக்கைகளை தற்போர்தே நடைமுறைப்படுத்தியுள்ள தாக. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 10,168,196 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவினம் ரூபா 9,772,843 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நீர் கட்டணம் | | |
| மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டுகளிற்குரியதாக 2546 தனியார் நீர் துகர்வோர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை நீர் கட்டணம் ரூபா 6,233,415 மற்றும் 16 அரச நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 89,953 தொகையை அறவிட 2022 மார்ச் 31 வரையும் | நிலுவை நீர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

போதிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### வாகன தொகுதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| தவிசாளரின் உத்தயோகபூர்வ கெப் வண்டியை அவரினால் செலுத்திக் கொண்டிருக்கையில் 2018 ஒக்டோபர் 01 திகதி முச்சக்கர வண்டியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகி இருந்ததுடன் வண்டியை திருத்துவதற்காக ரூபா 1,950,303 செலவிடப்பட்டிருந்தது. விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) பிரகாரம் ஆரம்ப புலனாய்வு அறிக்கையை தயாரித்திருந்த போதும், உள்ளூராட்சி ஆணையாளரினால் 2019 மார்ச் 14 திகதி நியமித்திருந்த விசாரணை குழுவினால் நிதிப்பிரமாணம் 104(4) பிரகாரம் இறுதி அறிக்கையை 2022 ஜூன் 30 திகதியளவிலும் தயாரித்திருக்காததனால் காப்புறுதிக் காப்பினூடாக மீள்நிரப்பியிருக்காத ரூபா 630,244 ஆன நட்டத்திற்கான பொறுப்புதார தரப்பினரை இனங்காண மற்றும் அதன் பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. | தற்போது விசாரணையை மேற்கொண்டுள்ளதாக. | விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| பம்பஹின்ன வாராந்த சந்தை அபிவிருத்திக்காக 2015 மற்றும் 2017ஆண்டுகளில் ரூபா 4,561,397 செலவிட்டிருந்த போது சந்தையை நடாத்த பொறுத்தமானவாறு எஞ்சிய் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்காததால் மீளாய்வாண்டு இறுதிவரையும் அது விளைவற்று காணப்பட்டது. | 2018 ஆண்டு இந்த சந்தை வளவின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்ய உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் வாராந்த சந்தையை நிர்மாணிக்க மதிப்பீடு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் நிதி ஏற்பாடு கிடைத்த பின்னர் வாராந்த சந்தை வியாபாரிகளுக்கு பயன்படுத்த முடியுமானவாறு தயாரிப்பதாக. | ஏற்பாட்டை பெற்றுக் கொண்டு சந்தையை நடாத்த முடியுமானவாறு அபிவிருத்தி செய்ய வேண்டும். |